# செய்தி வெளியீடு

மழைக்கால வெள்ள எச்சரிக்கை! எண்ணூரின் 17 ஏக்கர் அலையாத்தி காடுகள் உட்பட 39 ஏக்கர் சதுப்புநிலத்தை TANTRANSCO ஆக்கிரமித்த காரணத்தால் 10 லட்சம் பேர் வெள்ளத்தில் சிக்கும் அபாயம்!

சென்னை, 7 அக்டோபர் 2021:* மழைக்காலத்தில் சென்னை மக்களை வெள்ளத்திலிருந்து காப்பதற்கு அடையாறு, கூவம், கோவளம் நதிநீர் வடிநிலப்பகுதிகளில் கவனம் குவிக்கப்படுகிறது. ஆனால், பெருநகரின் வடக்கே உள்ள கொசத்தலையாறு வடிநிலம் மற்றும் எண்ணூர் கழிவெளியின் நிலைமையை கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை என்று எண்ணூர் கழிவெளி பாதுகாப்பு பிரச்சாரம் சுட்டிக்காட்டியுள்ளது. புறக்கணிக்கப்பட்டுள்ள ஆற்றையும், TANTRANSCO ஆக்கிரமித்துள்ள 16.6 ஏக்கர் அலையாத்தி காடுகள் உட்பட 39 ஏக்கர் எண்ணூர் கழிவெளி பகுதியையும் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பார்வையிட வேண்டும் என்று எண்ணூர் கழிவெளி பாதுகாப்பு பிரச்சாரம் கோரியுள்ளது. TANTRANSCOவின் இச்செயலை எதிர்த்து எண்ணூர் மீனவர்கள் போராடினார்கள். இருந்தபோதும், கழிவெளியில் போடப்பட்ட சாலைகள் மற்றும் கட்டிட கழிவுகளை TANTRANSCO அகற்றவில்லை. குருவிமேடு, பக்கிங்காம் கால்வாய் உள்ளிட்ட, கழிவெளியின் பல்வேறு பகுதிகளில் இச்சாலைகள் நதிநீரை ஓடவிடாமல் தடுக்கிறது. அலையாத்திகளை மூடியTANTRANSCO வின் நடவடிக்கைக்கு முந்தைய மற்றும் பிந்தைய துணைக்கோள் நில வரைபடங்களை வெளியிட்ட கழிவெளி பாதுகாப்பு பிரச்சாரம், TANTRANSCOவின் நடவடிக்கை வேண்டுமென்றே செய்யப்பட்ட சுற்றுச்சூழல் அழிப்பு வேலை என்று குற்றம்சாட்டியது. இதன் காரணமாக, பருவமழை பெரிய அளவு பெய்தால், வட சென்னை, மணலி, மாதாவரம், பொன்னேரி, கும்மிடிபூண்டு பகுதிகள் மழைக்கால வெள்ளத்தால் சூழப்படும் என்றும் அதனால் 10 லட்சம் பேர் பாதிக்கப்படுவார்கள் என்றும் சுட்டிக்காட்டியது. இந்த ஆய்வில், திட்டத்தினால் அமைக்கப்பட்ட 30 மின் கோபுரங்களை ஆய்வு செய்தபோது, கட்டி முடிக்கப்பட்ட ஒரேயொரு மின் கோபுர இடத்தில் கூட, TANTRANSCO வுக்கு அளிக்கப்பட்ட CRZ அனுமதியில் குறிப்பிட்டுள்ளபடி, சதுப்புநிலம் அதன் பழைய நிலைக்கு கொண்டுவரப்படவில்லை என்ற உண்மை வெளிப்பட்டது. திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டபோது, “திட்டத்திற்காக ஏதேனும் தற்காலிக கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டால், திட்டம் முடிவடையும்போது அவற்றை உடனடியாக அகற்ற வேண்டும்” என்று TANTRANSCOவிற்கு அளிக்கப்பட்ட CRZ அனுமதி சொல்கிறது.

NTECL வள்ளூர் மின்நிலையத்திற்கு அருகில் குருவிமேட்டில் அமைக்கப்படும் மின் கடத்தி கோபுரம், CRZ 1A (அதாவது அலையாத்தி இடைப்படு பகுதி) என்று குறிப்பிடப்பட்டுள்ள, அங்கீகரிக்கப்பட்ட கடற்கரை மேலாண்மை மண்டல நிர்வாகத் திட்டத்தின்படி பாதுகாக்கப்பட்ட, 3 ஏக்கர் பரப்பில் சட்ட விதோமாக கட்டப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி ((W.P.Nos. 30237 and 30135 of 2018), எம்எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியோடு NTECL அப்பகுதியில் அலையாத்திகளை மறு உருவாக்கம் செய்துகொண்டு வருகிறது. இதற்கு முன்பு சாம்பல் குளம் கட்டுவதற்காக NTECL செய்த ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக எண்ணூர் மீனவர்கள் தொடுத்த வழக்குகள் தான் மேலே குறிப்பிடப்பட்டுள்ளன. தற்போது நீதிமன்ற உத்தரவின்படி அலையாத்தி

மறு உருவாக்கம் செய்யப்படும் பகுதியிலேயே அலையாத்தி அழிக்கப்படுகிறது. அலையாத்தி பகுதிகளில், அதாவது CRZ 1A பகுதிகளில் மின் கோபுரங்களைக் கட்டுவதற்கான CRZ அனுமதி எதுவும் TANTRANSCOவிற்கு அளிக்கப்படவில்லை.

மேலும் இரண்டு CRZ 1A பகுதிகளில் அத்துமீறல் நடந்துள்ளது வெளிப்படையாகத் தெரிகிறது. அத்திப்பட்டு பிரதான சாலைக்கு தெற்கேயுள்ள பாதுகாக்கப்பட்ட சதுப்புநிலப்பகுதிகளில் அலையாத்திகளை அழித்து மின்கோபுரம் கட்டப்பட்டுள்ளது. இதற்கு முன்பு இந்த அலையாத்தி பகுதியைக் காமராஜர் துறைமுகம் ஆக்கிரமித்திருந்தது. அந்த ஆக்கிரமிப்பை அகற்றி அலையாத்திகளை மீண்டும் உருவாக்க வேண்டும் என்று தேசிய பசுமை தீர்ப்பாயம் (NGT) காமராஜர் துறைமுகத்திற்கு உதிரவிட்டிருந்தது. அந்த பகுதியில்தான் தற்போது மற்றொரு அலையாத்தி அழிப்பு அரங்கேற்றப்பட்டு மின் கோபுரம் கட்டப்பட்டுள்ளது. அத்திப்பட்டு பிரதான சாலையின் வடக்கு பக்கத்தில், CRZ 1A (அலையாத்தி) மற்றும் CRZ IB (அலை தாக்கப் பகுதி) ஆகிய பகுதிகளில் கட்டுமான குப்பைகள் கொட்டப்பட்டு சட்டவிரோதமாகச் சாலை அமைக்கப்பட்டுள்ளது இப்போதும் கூட தெளிவாக தெரிகிறது.

அடையாறும் கூவமும் சேர்ந்து எந்த அளவுக்கு வெள்ள நீரை வெளியேற்றுமோ அதைவிட இரண்டு மடங்கு கூடுதல் வெள்ள நீரை கொண்டு செல்லும் நதியாக கொசத்தலையாறு இருக்கிறது. அடையாற்றுக்கும் கூவத்திற்கும் கழிவெளிகள் இல்லை. ஆனால், மணலி முதல் பழவேற்காடு வரை நீளும் கழிவெளியைக்கொண்ட ஆறாக கொசத்தலையாறு இருக்கிறது. இந்த நீர்ப்பகுதியை நம்பி குறைந்தது 10 ஆயிரம் மீனவர்கள் வாழ்கிறார்கள். இந்த ஆற்றின் நீர்ப்பிடி பகுதிகளில் ஏறக்குறைய 10 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள்.

மாநில பேரிடர் மேலாண்மை அதிகார அமைப்பு இப்பிரச்சனையில் தலையிட வேண்டும் என்றும், மழைக்கால முன்தயாரிப்பு பணியின் நிமித்தம் உடனடியாக முதலமைச்சர் எண்ணூர் கழிவெளி பகுதியை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ய வேண்டும் என்றும் எண்ணூர் கழிவெளி பாதுகாப்பு பிரச்சாரம் கோருகிறது. அனைவரின் கவனத்தையும் கவரும் அடையாறு, கூவத்திற்கு மழைக்காலத்தில் அளிக்கப்படும் சிறப்புக் கவனம், கொசத்தலையாற்றுக்கும், அதனால் பாதிப்புக்கு ஆளாக வாய்ப்புள்ள மக்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்று எண்ணூர் கழிவெளி பாதுகாப்பு பிரச்சாரம் கோருகிறது.

*மேலும் விவரங்களுக்கு:* 9176463032, 9444082401

எண்ணூர் கழிவெளி பாதுகாப்பு பிரச்சாரம், 92, 3வது குறுக்கு தெரு, திருவள்ளுவர் நகர், பெசன்ட் நகர், சென்னை - 600090.